முன்னைப் பிறவிகளில் தாம் செய்த வினைகளைப் பற்றி அறியாத நிலையில் இப்பிறவியில் அந்த வினைகளின் பயனை அனுபவிக்கிறோம் என்ற அறிவு இல்லாத மக்கள் தாம் படும் துன்பங்களுக்குக் காரணம் தேடி அலைகின்றனர். வினப்பயனை அனுபவிக்கும் துணிவு இல்லாமல் மாற்றுவழிகளைத் தேடுகின்றனர். சோதிடத்தைத் துணைக்கு வைத்துக் கொண்டு 'பிறந்த நேரம் சரியில்லை' என்ற சோதிடர்களின் கருத்தை நம்பத் தொடங்குகின்றனர். இந்த நம்பிக்கையின் வளர்ச்சி, நல்ல நேரம் பார்த்தல், ஜாதகம் கணித்தல், தோஷம் கழித்தல் என்று பல செயல்பாடுகளைக் கொண்ட லாபகரமான ஒரு தொழிலை உருவாக்கிவிட்டது. தொழில் வளர்ச்சியில் ஏற்பட்ட போட்டியால் புதுப்புது கண்டுபிடிப்புகள் தொடர்ந்து வெளிவருகின்றன.

இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இல்லாத சனிப்பெயர்ச்சி, குரு பெயர்ச்சி இன்று கோவில்களில் மிகப்பெரிய விழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன. பிறந்த குழந்தைக்கு நல்லநேரம் பார்த்து ஜாதகம் கணிப்பதைப் போல் இறந்த மனிதனுக்கு இறந்த நேரம் நல்ல நேரமா என்று பார்ப்பதும், இறந்த நேரம் நல்ல நேரம் அல்ல என்றால் அதற்கும் சில ஆயிரம் வெள்ளி செலவு செய்து பரிகாரம் செய்வதும் இப்போது வழக்கத்திற்கு வந்துவிட்டது.

இந்துக்களின் கிரக நம்பிக்கைகள் எது வரைக்கும் போயிருக்கிறது என்பதற்கு மற்றோர் எடுத்துக்காட்டும் சொல்லலாம். கும்பகோணத்தின் அருகில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானாகிய திருநாகேஸ்வரர் கருவறையின் மேல் 'ராகுகேது தோஷம் தீர்ப்பார்' என்ற கருத்துடைய வாக்கியம் எழுதப்பட்டுள்ளது. இதைப் போல் கும்பகோணத்தில் மற்றொரு கோவிலிலும் கருவறையின் மேல் ஒரு கிரகத்தின் பெயர் எழுதப்பட்டுள்ளது. மலேசியாவில்

இறந்தவர்களுக்கு மோட்ச தீபம் போடுவதற்குப் பயன்படும் சிவலிங்கம் தமிழ் நாட்டில் கிரகதோஷம் தீர்க்கும் கடவுளாக மாறிவருகிறார்.

நவக்கிரகங்களில் ஒன்றாகிய வியாழனுக்குக் குரு என்று ஒரு பெயர் உண்டு. சைவ சமயத்தில் சிவபெருமான் தென்முகக் கடவுளாக இருக்கும்போது குரு என்று கருதப்படுவார். இப்போது நவக்கிரகக் குருவையும் தென்முகக் கடவுளாகிய குருவையும் ஒருநிலையில் வைத்து நவக்கிரக வழிபாட்டைச் சிவ வழிபாட்டோடு இணைத்துவிட்டார்கள். இப்படியே முழுமுதல் பரம்பொருளும் கருவறை மூர்த்தியும் நவக்கிரகங்களோடு இணைக்கப்படும் புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நடந்து வருகின்றன. கோவிலுக்கும் கோவில் குருக்களுக்கும் வருமானம் வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் சமய மரபுகளும் ஆகம விதிகளும் வரு மானத்திற்காகப் பலியிடப்படுகின்றன.

இதன் விளைவு?

கருவறையில் இருக்கும் மூர்த்திக்கான வழிபாடு அவசர கதியில் அலட்சியப்படுத்தப்படுகின்றன. இதனால் முழுமுதல் கடவுள் மீது மக்களுக்கு ஏற்பட வேண்டிய பக்தி நவக்கிரகங்கள் பக்கம் திரும்பிவிடுகின்றது.

மூர்த்தியின் மீது பக்தியும் அதனால் வர வேண்டிய ஆன்மீக வளர்ச்சியும் தடைபட்டு உலகியல் லாபம் கருதிய நவக்கிரக தோஷ பரிகாரமே இந்து சமயம் என்ற நிலை இப்போது உருவாகிவிட்டது.

ஒரே ஒரு கேள்வியால் மனம் திரும்புங்கள். ஒரு கோவிலில் இருக்கும் கருவறை மூர்த்தி, நவக்கிரகம் இரண்டில் எது ஆற்றல் உள்ளது? கருவறை மூர்த்தி என்றால் நவக்கிரகங்களைப் புறக்கணித்து விடுங்கள். நவக்கிரகமே என்றால் எதிர்காலத்தில் சிவனுக்கும் விநாயகருக்கும் முருகனுக்கும் அம்மனுக்கும் கோவில் கட்டாதீர்கள். இருக்கிற கோவில்களிலும் அந்த மூர்த்திகளை வெளியேற்றிவிட்டு நவக்கிரகங்களைக் கருவறையில் வைத்துவிடுங்கள்.